பார்க்கிற காலத்தில் அவர்களுடைய பழைய செல்வாக்கைப் பயன் படுத்தி அங்குள்ள தனி முதலாளிகளுக்கு ஆக்கம் கொடுப்பதற்காக செயல்படுவதாகக் காணப்படுகிறது. அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு உள்ள கஷ்டங்களைப் பற்றிய கேள்வி இது. அதில் சில பேர்கள் அதிர்ஷ்டக்காரர்களாக இருக்கிருர்கள் என்பதை அங்கத்தினர் கவனப்படுத்துகிருர்.

DR. H. V. HANDE : Sir, the previous Government refused to consider even the necessity or possibility of enhancing the pension even though we have been telling them for the past five years. Also, in view of the fact that pension is calculated only on the last three years' average income which means it would be very much less than in the last year will this Government at least give us an assurance in this House that though they may not enhance the pension, they will appoint a small commission to examine the question of commitment to this Government on account of the enhancement of pension?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I have not yet gone fully into the question though I have had some discussions with several pensioners of the City of Madras. I will certainly look into the question but it ought not to be considered as an assurrance.

திரு. நா. காசிராமன் : இந்த பென்ஷன் திட்டத்தில் குறைந்தது இவ்வளவாவது பென்ஷன் கிடைக்க வேண்டும், அதிகபட்ச அளவிற்கு இவ்வளவிற்கு மேற்படக்கூடாது என்ற திட்டத்தை வகுத்து எல்லோருக்கும் கூடுமானவரையில் நல்லவகையில் பென்ஷன் கிடைக்க சர்க்கார் திட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : பென்ஷன் வாங்குவதில் பென்ஷன்காரர்களே சில முறைகளைக் கேட்கிருர்கள். அவர்கள் கேட்கிற சிலமுறைகளையும் சர்க்கார் அனுசரித்து கூடுமானவரையில் அந்தப் பென்ஷன் தொகை அவர்களுக்கு வசதியாக இருக்கிற முறையில் அமைந்திட அவர்களோடு கலந்து பேசுவதில் இந்த சர்க்காருக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

* 177 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பென்ஷனர்களுக்குத் தரப்படும் அகவிலைப்படியை உயர்த்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether a deputation of these pensioners waited upon the Hon. Chief Minister in this connection and a memorandum was presented to him. Also, what is the reaction of the Hon. Chief Minister to such kind of memorandum?

THE HON. THIRU C. N. ANNADURAI : The deputation came but they did not wait. I gave them an immediate interview. They explained their point of view. I gave a very sympathetic hearing and I said that I would look into all the difficulties that they had explained.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, sometime back during the administration of schools by the district boards, a kind of financial aid called 'gratuity' was being paid to the retired teachers, but after the advent of the panchayat union councils, that practice seems to have been given up. Will the Government reconsider that?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not think that the hon. Member's query arises as a consequence of that.

திண்டிவனத்தில் தீயணைப்பு நிலையம்

*183 வினா.—திரு. க. இராமமூர்த்தி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனத்தில் நடப்பு ஆண்டில் தீயணைப்பு படை அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஆம்.

THIRU K. VINAYAKAM : Sir, may I know what is the probable investment that will have to be made in this regard?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I do not have the figures but I think it would be the usual figure.

THIRU K. VINAYAKAM : Sir, may I know how soon will this be started especially as these are days of frequent fire accidents?

THE HON. THIRU C. N. ANNADURAI : The importance of Fire Services is being realised by this Government and they gree that it should be expedited.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த தீ அணைக்கும் மோட்டார்கள் ரொம்பக் குறைந்த சக்தியுடைய மோட்டார்களாக இருக்கிற காரணத்தினால்தான் அவை சீக்கிரத்தில் தீ பிடிக்கக் கூடிய இடங்களில் அதிகப்படியான அளவிற்கு அதை அணைக்க முடியாத நிலையில் சக்தியற்ற நிலையில் இருப்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, அதிக சக்தி படைத்த மோட்டார்களுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?